நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம்
807, அண்ணா சாலை, சென்னை-2
www.tn.gov.in/dtcp
Email ID: dtcp@vsnl.net

சுற்றறிக்கை

ந.க.எண்.2244/2013/பிஏ2 நாள்.11.06.2013

பொருள்: பொதுப்பணித் துறை - நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம், சென்னை-02 - தடையின்மைச் சான்று - கட்டிடம், மனைப்பிரிவு மற்றும் நில உபயோக மாற்றம் - உத்தேசங்களைப்பரிசீலிக்க பொதுப்பணித் துறை தடையின்மைச் சான்று பெறுதல் - தொடர்பாக.

பார்வை: 1. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் நேர்முகக் கடிதம் ந.க.எண்.2244/2013/பிஏ2, நாள்.01.02.2013. (அரசுச் செயலர், பொதுப்பணித் துறை அவர்களுக்கு முகவரியிட்டது)
2. Engineer-in-Chief, WRD, சேப்பாக்கம், சென்னை அவர்களின் கடிதம் எண்.S7(1)/68809/2003, நாள்.18.03.2013

பார்வை 2-ல் சுட்டிய கடித நகல் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

கட்டிடம், மனைப்பிரிவு மற்றும் முழுமைத் திட்டம் / விரிவு அபிவிருத்தித் திட்டம் நில உபயோக மாற்றம் தொடர்பான உத்தேசங்கள் அனுமதி வழங்க பரிசீலனை செய்யப்படும் சமயம் பொதுப்பணித் துறையின் தடையின்மை சான்று (NOC) பெற வேண்டிய அவசியமிருப்பின் எந்தப் பகுதிக்கு எந்த பொதுப்பணித் துறை அலுவலத்திலிருந்து NOC பெறப்பட வேண்டும் என்பது குறித்து பார்வை 2-ல் சுட்டிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி உரிய அலுவலகத்திடமிருந்து NOC பெற்று பரிசீலிக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்தச் சுற்றறிக்கை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை, மறு அஞ்சலில் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு:
பார்வை 2-ல் சுட்டிய கடித நகல்

ஒம்/- ஆ.கார்த்திக்,
நகர் ஊரமைப்பு ஆணையர்.

பெறுநர்:
அனைத்து சார்நிலை அலுவலர்கள்

நகல்:
1. அனைத்து தலைமை அலுவலக உதவி இயக்குநர்கள்
2. அனைத்து தலைமை அலுவலக திட்ட உதவியாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் வரைவாளர் நிலை-3

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

11/6/13
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

கி.சி.05.06.

11/6/13

Verified by EagleEstate ™